உ

சிவமயம்

# திருவையாறு,

# சப்தஸ்தானத்தோத்திரம்.

இஃது

தஞ்சைமாநகரம்.

ந. வீரபத்திரபிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு

ஷை யூர் கோட்டை வடக்குவீதி

அ. பரிசுத்தம் பிள்ளை.

கோ. சின்னசாமி நாயக்கர்.

இவர்கள் வேண்டுகோளின்படி

தஞ்சை "நாஷனல் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி ஞூ மாசி மீ

இதன் விலை அணா க.

# விநாயகர் துதி.

## சரணங்கள்.

தேவாதி தேவர்கள் யாவரு மகிழ்ந்தெங்கள்
தீர்த்தனே வுயர்திரி நேத்திரனே
காவாவென்றேதினங் கரங்குவித் திறைஞ்சிடுங்
காட்சிய னேவிக்கி னேச்சுரனே
மூவாமுதற்பரம முத்திவித் தாகியே
முளைத்தெழும் பிரணவப் பொருட்கரனே
பாவாபாவாதீத நின்பதப் புணைபற்றிப்
பவக்கட லினைக்கடந் திடற்குரனே. (அருள்வா)

கந்தமல்லிகையிரு வாட்சிசண்பகமுல்லை
காவியெருக்கரளி கஸ்தூரி
கொந்துபாதிரிதும்பை யாத்திசிவந்திபன்னீர்
கொன்றையரத்தம்வன்னி கொழுந்துவில்வம்
நந்திவிருட்சியல்லி நெல்லிமருவறுகு
நளினமந்தாரைபுன்னை பாரிசாதம்
இந்தமலர்களுடன் சிந்தைமலரினைச்சேர்த்
தின்புடனுனைப்பூசித் திடவரமே. (அருள்வா)

ஆதிமத்யாந்தமில் லாதவகண்டபர
மாநந்தபூரணச் சிவக்கொழுந்தே
காதலித்தருந்தமி ழோதுமிருந்தவர்கள்
கன்மவினையகற்று மருமருந்தே
மாதுவல்லபையுடன் சோதியிலங்குமாகு
வாகனமீதேறி மனமகிழ்ந்தே
சாதுசங்கத்தர்சுரர் வேதியரனைவரும்
ஜயஜயவெனவேயிச் சமயம்வந்தே. (அள்ருவா)

பாசபந்தங்களெனுங் கோசங்களோரைந்தும்
பரித்துணர்வானவ ரகத்தணியே
வீசுந்திருக்கரத்திற் பாசாங்குசந்தரித்த
விநாயகனேயருட் குருமணியே
தேசிகமாதிமூ வாசையிற்றிகைத்துளஞ்
சிந்திக்குஞ்செயல்மறந் துணையெணியே
நேசமோடுனதுமெய்த் தாசர்கள்தமைக்கூடி
நித்தமுநினைத்துதித் திடும்பணியே. (அருள்வா)

## நாமாவளி.

ஆகுவாகனு ஐங்கரனே-ஏகநாயகா எம்பரனே. (௧)

கணாதி பதியே கதிநிலையே-அணாத மதியை யணிமலையே. (௨)

ஒற்றைமருப்பா ஏரம்பா-பற்றைவிடுத்தார் பாலன்பா. (௩)

ஓங்காரப்பொரு ளானவரா-நீங்காவற்புத ஞானபரா, (௪)

வாரணமுகவா வல்லபைநாதா-ஆரணமறியா வம்பரபோதா. (௫)

விக்கினேச்சுரா விடையான் புதல்வா
முக்கண்ணுயகா முடியா முதல்வா. (௬)

பாசாங்குசதர பத்தர்கணேசா-தேசோமயசுக சித்துவிலாசா, (௭)

புண்ணியநித்திய புத்தகமே-விண்ணவர்நத்திய வித்தகமே. (௮)

மூவாமுத்த சுகோததியே-தேவாநித்ய குணாநிதியே. (௯)

சிவசிவதேவ சிகாமணியே-தவநிலையாளர் மனோமணியே. (௰)

சிவமயம்

# சுப்பிரமணியர் துதி.

---

## விருத்தம்.

கண்முகமூன் றைந்துடைக்கங் காதரற்கன் றுரியனைக்
    கருணை வாய்ந்த
உண்முகமா வோங்காரத் துட்பொருளை யினிதுணர்த்தி
    யும்பர் கோமான்
விண்முகவாழ் வுறச்சிகண்டி மீதேறி வெற்றியயில்
    வேற்கை பூண்ட
சண்முகவன் பூஞ்சதங்கைத் தாண்மலரை முப்போதுந்
    தலைமேற் கொள்வாம்.

## சங்கராபரணம்.

அம்பிகை மதலாய் போற்றி ஐங்கரன் றுணைவா போற்றி
இம்பரா னுலகோ ரேத்தும் எம்பொரு ளானாய் போற்றி
கும்பமா முனிவற் குண்மை கூறிய குழகா போற்றி
நம்பினோர்க் கருளுஞ் சாமி நாதனே போற்றி போற்றி.

## கொச்சகம்.

ஆட்சியுறு மைந்தொழிற்செய் யையவருக்கு நீமுதலாஞ்
சாட்சியுரு வென்றுணர்வான் சண்முகங்கொண் டிங்கெழுந்தோய்
மாட்சிமயில் வாகனத்தில் வள்ளிதெய்வ யானையொடுன்
காட்சியளித் தென்றுமெனைக் காத்தருள்வ துன்பரமே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்

பல்லவி.

கந்தா கதிர் வேலவா கடையேன்றனை யாளவா

அனுபல்லவி.

சந்ததம்வானவர் தானவருந்தொழுந்
தற்பரசிற்பர சண்முகசிவசிவ. (கந்தா)

## சரணங்கள்.

கருணாகர நாதனே கனகாம்புய பாதனே
பரமாற்புத நீதனே, பத்தோடிரு காதனே
தருணமிதேயான் தாங்கிடேனினிமேல்
அருணகிரிக்கருளும் அறுமுகசுககுக. (கந்தா)

பரிபூரண சீலனே பாகீரதி பாலனே
கரிமேல்வரு கோலனே கனதானவர் காலனே
முருகனேயகத்திய முனிமனமகிழ்தர
அருளியகுருபர அரகரசிவசிவ. (கந்தா)

அமராபதி காவலா, அனைத்துஞ்செய வேவலா
குமராமுழு நாவலா, கொடியாமொரு சேவலா
மும்மலவல் வினையற முதுபரசுகமுற
அமல நினருள்பெற அருள்சரவணபவ. (கந்தா)

உரவோர்தொழு மெய்யனே ஒயிலாமயில் வையனே
புரிநூலணி துய்யனே புனிதாமுரு கையனே
பரிவுடன் றுதிசெயும் பாவலர்க் கருள்செயுஞ்
சுரர்குலந் தனைக்காத்த சுபகுண வதிசய. (கந்தா)

## நாமாவளி.

சரவண பவகுக சண்முக வேலா-அரவணியரன்மகி ழம்பிகைபாலா.
மலைதொறு முறைவா மான் மருகா-கலையுணர் புலவா வேள் முருகா.
அமரா பதிகா வலனேயுமையாள்-குமரா வணிகா குழகா யெமையா
அடியார்க் குட்படு மண்ணியனே-வடிவேற்சுப்பிர மண்ணியனே [ள்
ஆபத்தடையாதெனையாள் சேயா-நீபத்தொடையா நினைவார் நேயா
பண்ணவர்சேனா பதியே மதியே-அண்ணருமோனா அருள்வாரிதியே
குகசிவ மைந்தா குருபரனே-துகளறு கந்தா சுபகரனே. (எ)
வையா புரியா மயில்வையா-ஐயா வரியா அருள் மெய்யா. (அ)
பரசிவபாலா பன்னிருதோளா-வரகுணசீலா வள்ளிமணாளா. (௯)
வேலாயுதகா வலனே விகிர்தா-காலாயுதகே தனனே சுகிர்தா. (ω)

சிவமயம்

# திருவையாறு.

செம்பொற்சோதிஸ்வரர்—அறம்வளர்த்த நாயகி.

## விருத்தம்.

பொன்பூத்த கொன்றைமதிச் சடையுந் தூய
பொடிபூத்த திருநுதலும் புயங்க ளெட்டும்
மன்பூத்த மணிமிடறு மழுமா னேந்து
மலர்க்கரமு முப்புரிநூல் வனைந்த மார்பும்
இன்பூத்த மால்விடையுங் கண்டைத் தாளு
மெளியேன்கண் டிறைஞ்சவரு ளெழிலை யாற்றிற்
றென்பூத்த வறம்வளர்த்த் மங்கை பங்கா
செம்பொற்சோ தீச்சுரனே தேவ தேவே.

## சங்காபரணம்.

காற்றுறைந் தலைபஞ் சென்னக் கருத்தழிந் துலகிற் கன்மச்
சேற்றுறைந் தயரா வண்ணம் திருவருள் புரிந்து காப்பாய்
மாற்றுணா மருவாப் பொன்னே மகிழ்ந்தறம் வளர்த்தாள் பாலை
யாற்றுறை செம்பொற் சோதி யண்ணலே யடியார் வாழ்வே.

## கொச்சகம்.

பூவனந்தீ கால்வானம் பூதமதி யாதவனென்
றீவனதி வாயகிலைத் தேர்ந்துணர்வ தெவ்வணநான்
ஆவினஞ்சு ளையாற்றி லன்யா லறம்வளர்த்த
தேவிநங்கை மேவியுறை செம்பொற்சோ தீச்சுரனே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

பல்லவி.

அரகரசெம்பொற் சோதியனே அறம்வளர்நங்கைக் காதியனே.

அநுபல்லவி.

தருவளர்பஞ்ச நதிப்பதிமேவிய சங்கரசிவசிவ சாம்பசதாசிவ. (அர)

### சரணங்கள்.

ஐயமறுத்தரு ளாண்டவனே அடிமுடிபுவிவா னீண்டவனே
பையரவப்பணி பூண்டவனே பரமசிதம்பரத் தாண்டவனே
வையகத் துனதிரு மெய்யடி யலதொரு
வருந்துணை யறியேன் புரந்தருள் வாய்சிவ. (அரகர)

பத்திவலைப்படுஞ் சுந்தரனே பாசவிமோசசு தந்தரனே
சித்தியளித்திடு மந்தரனே சிந்தனைக்கரியநி ரந்தரனே
எத்தினம் வருவாய் உத்தம குருவாய்
இப்பொழு தருள்வாய் சிற்பர மானந்த. (அரகர)

பேதாபேதங் கடந்தவனே பேரின்பவெளிமேற் படர்ந்தவனே
மாதொருவிடைமேல் வருந்தவனே மாதவர்போற்று மருந்தவனே
ஆதிய னாதியு மாகிய தேவா
அடியேற் கருள்திரு வையா றுசிவ. (அரகர)

### நாமாவளி.

ஐயாறன் றுதி வாக்கியமே-மெய்யாகம்பெறு பாக்கியமே. (க)
உம்பர்க்காதி வானவனே-செம்பொற்சோதி யானவனே. (உ)
வித்தகவேத விலட்சணநீதா-தத்துவபோத சலட்சண நாதா. (௩)
பாகீரதிபுனை செஞ்சடையா-வாகீசரினுரை யின்றொடையா. (௪)
பையாரரவப் பணியானே-ஐயாறுறைமெய்ம் மணியானே. (௫)
வினையிருள்கெடவரு விண்மணியே-எனதுளமருவிய கண்மணியே.
சிவனடிநண்போ ரன்பதுவே-சிவசிவசம்போ வென்பதுவே. (௭)
ஒருபொழுதையா றப்பாவென் றிடின்
இருவினைசெய்ம்மா லப்பாணின் றிடும். (அ)
உவமிக் கரியா ஒருசிற் பரமா முருவோனே
தவமுத் தரிஞ ரவிற் கருளைத் தருவோனே. (௯)
மாதே வாசிவ தேவாதேவா-நாதா ஞானவி நோதா வாவா. (௰)

சிவமயம்

# திருப்பழனம்.

ஆபத்சகாயர்—பெரியநாயகி.

## விருத்தம்.

விருப்பழகா ரண்டமெலா முண்டவயிற் றுடைநெடுமால்
விடையின் மீதோர்
பொருப்பழக னீன்றபெரும் புகழ்ப்பெரிய நாயகியோர்
புடையிற் கொண்டு
தருப்பழமுங் கொடிப்பழமுந் தரத்துகுசெஞ் சலசமலர்த்
தடஞ்சு லாவுந்
திருப்பழனத் துறையாப்த சகாயரடிக் கமலமுடி
சேர்த்து வாழ்வாம்.

## சங்கராபரணம்.

காருலா மேதி யேறிக் காலனு ரணுகா முன்னர்ச்
சீருலா மலர்த்தாட் காளாச் செய்திருப் பழனத் தென்றும்
பேருலா வான்றோ ரேத்தும் பெரியநா யகிவாழ் கொன்றைத்
தாருலாம் புயனே யாப்த சகாயனே சிவாய வாழ்வே.

## கோச்சகம்.

அற்புடையா வம்மையப்ப னையனுநீ யுன்னையலாற்
கற்பனையா மிப்புவியிற் காணே னொருதுணையும்
நற்பழனம் வாழ்பெரிய நாயகியார் கண்களிக்குந்
தற்பரனே யாப்த சகாயா தயாநிதியே.

செஞ்சுருட்டி-இராகம்-பியாண்டுமெட்டு-ஏகதாளம்.

சீருலாவிய பாரெலாம்புகழ் தெய்வநாயகனே
சிந்தனைமொழி யந்தரத்தெழுந் திவ்யசிற்சுகனே
நீரிளம்பிறை சேருஞ்செஞ்சடை நின்மலாம்பகனே
நித்யமங்கள முத்திநல்கிடும் நிகிலவாசகனே
நேயவருட்போதா தூயமலர்ப்பாதா
நிச்சயமா யிச்சமயம் பட்சமுடன் ரட்சியெனை. (சீருலா)

பூதமாதிய காலமூன்றினும் பொன்றிடாப்பொருளே
புரங்கண்மூன்றினு மயங்கிடாதவர் புந்தியின்றெருளே
ஓதவாருணஞ் சூழ்புவிவயத் தோன்றியிங் குருளே
ஒத்தலையுமென் சித்தநின்றிடற் கோர்நிலை யருளே
உரகதிருப் பூண பரகயிலை வாண
உத்தமசிற் சத்துவனே நித்யமகா தத்துவனே. சீருலாவி (௨)

சீலமாமறை நூலினுட்பொரு டேறியும்மறியேன்
தேசுலாவுநின் றாசர்தாட்பணி செய்யவும்மறியேன்
ஓலமின்றியுன் மூலவைந்தெழுத் துண்ணினைந்தறியேன்
உய்வதற்குநின் மெய்யருளன்றி யோர்துணையறியேன்
ஓங்கலுடல் வில்லாய் பாங்குமிகும் வல்லாய்
ஒருமொழியா மருமையுறுந் திருமொழியெற் கருள்புரிவாய். (௩)

சமயம் யாவையுங் கடந்தி லங்குப சாந்த தற்பதனே
சரியை யேமுத லுரியநால்வகைத் தன்மையாம்பதனே
அமையை நேர்புயப் பெரியநாயகி யமர்ந்தரஞ்சிதனே
ஆதியாப்தசகாயனென்னு மமலவச்சுதனே
அரகரசிவாய பரமகுருவாய
அக்கரனேமுக்கணனே நற்பழனத் தற்புதனே. சீருலா (௪)

## நாமாவளி.

அருட்பய னைத்தரு மையனே-திருப்பழனத் துறை மெய்யனே. (௧)
ஆரணம்போற்று மகாயனே-பூரணவாப்த சகாயனே. (௨)
அரியனுயகி லாண்டமும்படைத்தோய்
பெரியநாயகி யாந்தனமுடைத்தோய். (௩)
சங்கரஅரகர வென்றிடலே-இங்கிருவினைகளை வென்றிடலே. (௪)
அரகரசிவவென வெண்ணுவதே-பரசுககதிநெறி நண்ணுவதே. (௫)
கற்பனை யற்றவ ருட்புற வாசா-சிற்பர தற்பர மெய்ச்சக தீசா. (௬)
தடவரை வில்லன் சகலமும் வல்லன்
சுடலையி னில்லன் துகளறு நல்லன். (௭)
அகிலவி லாசன் அளவறு தேசன்-உகளமி வாசன் உமையவ னேசன்
புண்ணிய கதியே பசுபதியே-அண்ணிய மதியே குணநிதியே. [ன்
மாதா தாதா நாதா போதா-வேதா நீதா காதா தீதா. (௯)

சிவமயம்

# திருச்சோற்றுத்துறை.

---

தொலையாச்செல்வர்—ஒப்பிலாம்பிகை.

## விருத்தம்.

கருச்சோக விருட்கடலைக் கடந்து முத்திக்
கரையேறு நெறிகாட்டுங் கருணை யூட்டுந்
தருச்சோர னெனத்தோற்று நாம ரூப
சங்கற்ப விகற்பமிலாச் சாந்த நல்கும்
மருச்சோலை யென்றளிசூழ்ந் தொலிக்குங் கூந்தன்
மங்கையொப்பி லாம்பிகையை மருங்கிற் பூண்டு
திருச்சோற்றுத் துறையமர்ந்த தொலையாச் செல்வர்
செங்கமலப் பூஞ்சரணஞ் சிந்திப் போர்க்கே.

## சங்கராபரணம்.

பொன்னிரு நிலமு மாதும் பொய்ம்மையென் றுண்மை யொன்றை
உன்னிருந் தவத்தோ ரோத்து மொப்பிலா மங்கை பங்கா
துன்னிரு நிதிசேர் சோற்றுத் துறையுறை தொலையாச் செல்வா
உன்னிரு பதத்தை யல்லா லுறுதுணை பிறிதொன் றின்றே.

## கோச்சகம்.

மான்புரைகண் ணொப்பில்லா மங்கையுட னேமகிழ்ந்து
வான்புகழ்சோற் றுத்துறையில் வாழ்தொலையாச் செல்வாவென்
னூன்புகுந்து நெஞ்சுருக்கி யுன்கழலை யெஞ்ஞான்றும்
நான்புகழ்ந்து மாண்படைய நல்லவரந் தந்தருளே.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

தந்தாளுவாய்சக தீசனே சர்வதயாபர நேசனே. (தந்தா)

அனுபல்லவி.

சிந்தா மணிப்பிர காசனே செய்யா மறை முடி வாசனே
சிவபோதா குணநீதா சிறியேற் குரமே வுறவோர் வரமே. (தந்தா)

சரணங்கள்.

மலையான் மகட்கொரு நாதனே வாசாம கோசர போதனே
தொலையாப் பெருஞ்செல்வநீதனே சோற்றுத்துறைப்பிரக் யாதனே
சுருதியன்மால் கருதவொணுச் சயனேபரசின் மயனே யருணீ. (௧)

உவமிக் கொணுச்சிவ வாரணு உலகெங்கு மேவிய காரணு
தவமுத்தர் போற்றுமு தாரணு சர்வாநந் தாபரி பூரணு
சதசத்தா யொளிர்முத்தா தமியேற்கெளிதே யருளிப்பொழுதே.()

விண்ணுட ரேத்துமெண் டோளனே வீரகண் டாமணித் தாளனே
உண்ணுடு வோர்க்கரு ளாளனே ஒப்பில்லா மங்கைம ணுளனே
உருவருவா யுமைமருவா ஒளியே வெளியே எளியேற் களியே. (௧௩)

நாமாவளி.

சோற்றுத் துறையுறை செல்வா வடியேன்
வேற்றுத் துணையுனை யல்லா தறியேன். (௧)
அலையா நல்வாக் கருள்வை யெனக்கே
தொலையாச் செல்வா சுகிர்தம் நினக்கே. (௨)
அமல நித்தியா நந்தமெய் யோகா
விமலை யொப்பிலா மங்கையர் பாகா. (௩)
பாவா பாவா தீதப் பொருளே-மூவா நீதா போதத் தெருளே. (௪)
ஒன்ருு யன்ருு யுருவா யருவாய்-மன்ருய் நின்ருய் வருவாய் குருவாய்
சிரித்தே புரத்தோ ரகத்தோ டெரித்தோய்
விரித்தே மறைச்சீ ரடுத்தோர்க் குரைத்தோய். (௬)
ஆதியநாதி யநந்தன கேயன்-சோதிநிவாத சுகந்தரு தூயன். (௭)
அச்சுத னகண்டா கண்டனகாரி
இச்சையை யிகந்தார்க் கின்பருள்வாரி. (௮)
நிர்க்குண நித்த நிரந்தர ரூபா-சற்குணர் சித்த முறைந்தருள் தீபா.
பரா பராவென் ருுதரா-நிரா தரா கங் காதரா. (௯)

சிவமயம்

# திருவேதிகுடி.

வேதபுரீசர்—மங்கையர்க்கரசி.

## விருத்தம்.

பங்கயத்தவிசி னெண்கணத்தனருள் பாரினிற்கொடிய மால்விடந்
தங்கயிற்கண்மட மங்கையர்க்கணைசை சார்வுறுதமதி யீகுவாய்
வெங்கயத்தினத ளங்கமுற்றிடப மீதெழுந்தகருணாகரா
மங்கையர்க்கரசி பங்கில் வேதிகுடி வாழும் வேதபுரி யீசனே.

## சங்கராபரணம்.

பூந்தணம் புயப்போ துள்ளான் பொன்மகள் கொழுநன் விண்ணோர்
வேந்தனுந் தொழுது போற்றும் வேதியங் குடியுள் ளானே
மாந்தளிர் நிகர்த்த மேனி மங்கையர்க் கரசி யோர்பாற்
போந்தமர் துணைவா வேத புரீசனே போற்றி போற்றி.

## கோர்ச்சகம்.

சாதிகுடி யொன்றுமுடற் சாலமற நின்றெழும்பின்
நீதிகுடி யொன்றவருள் நேயமங்கை யர்க்கரசி
பாதிகுடி கொண்டதிரு பாதியனே மாதவர்சூழ்
வேதிகுடி மேவியுறை வேதபுரி யீச்சுரனே.

இராகம்-மோகனகல்யாணி-தாளம்-சாபு.

பல்லவி.

வந்தெனை யாண்டருள் தாதா எழில்
மங்கையர்க் கரசியோர் பங்கமர் நாதா. (வந்தெனை)

அனுபல்லவி.

விந்தை யறிவொழுக்கம் மேவினர் நேசா
வேதியங் குடியுறை வேதபு ரீசா. (வந்தெனை)

### சரணங்கள்.

வையகத் தாசையால் மயங்குதென் மனமே
துய்யவெள் விடைமீதில் தோன்றியித் தினமே. (வந்தேனை)
கடையவ னென்றென்னைக் கைவிட்டி டாதே
தடையற வருள்செயத் தருணமிப் போதே. (வந்தேனை)
சங்கர சிவசிவ சம்போம கேசா
துங்கம றைமுடிவாழ் சுயம்பிர காசா. (வந்தேனை)
புரியப்ப டும்பொருளும் புலனேந்துங் கெடவே
துரியப்பெ ரும்பதியிற் சுகித்திருந் திடவே. (வந்தேனை)
சுத்தநின் பணிசெயுந் தொண்டனெ னனவே
சித்தர்முத் தர்களெல்லாம் ஜெயஜெய வெனவே. (வந்தேனை)
இத்தலத் துடலாட்டும் இருவினை யறவே
பத்தியா யுன்புகழ் பாடியுய் வுறவே. (வந்தேனை)

### நாமாவளி.

வேதியங் குடிக்கண் மேவும் வேதமாபு ரீசனே
ஆதிமங்கை யர்க்கரசி மாதுவாழும் நேசனே. (க)
கொன்றை சூடி மன்றுள் ளாடி-ஒன்றை நாடி நின்றேன் பாடி. ()
அப்பிர மேயநி ரற்புதநேயா-சுப்பிரஞான சு லட்சண தூயா. (௩)
மங்கள நின்மல மனோகரா-துங்கவ சிந்தித சுபாகரா. (௪)
நேசா வதிசய காரண போதா-தேசோ மயபரி பூரண நாதா. (௫)
ஆண்டவ னம்பலத் தாண்டவனே
நீண்டவன் கண்பதம் பூண்டவனே. (௬)
அரியயற் கரியா வடிமுடியா-அரியுரு விடையா மொருகொடியா. ()
ஞான சுதந்தர மோனவு லாசா-வான வரஞ்சலி சூழும கேசா.. (௮)
சருவசுபா கரசிவதா-தருணம் பிகையாள் மகிழ்விரதா. (௯)
அடலர் தககண் டிதவங் கிரியா-உடலந் திகழ்பல் லுயிரின்கரியா. (௰)

உ

சிவமயம்

# திருக்கண்டியூர்.

---

வீரட்டேஸ்வரர்—மங்களநாயகி.

## விருத்தம்.

உருக்கண்டிங் திரன்முதலோ ருணர்தற் கெட்டா
வுண்மைசுக சித்துருவா முன்ருட் கன்பின்
பெருக்கண்டிப் பாமாலே புனைந்து நீங்காப்
பேரின்ப மெங்நாளிற் பெறுவேன் மேனுட்
செருக்கண்டி நின்றவயன் சிரத்தைக் கொய்து
திங்கண்முக மங்களமா தேவிக் கின்பாய்த்
திருக்கண்டி யூரிலெழுந் தடியா ரோத்தத்
திகழ்வீரட் டேச்சுரனே தேவர் கோனே.

## சங்கராபரணம்.

தெண்டிரைப் புணரி ஞாலச் சீவர்நெஞ் சகமே கோயில்
கொண்டிறைப் பொழுது நீங்காக் குணப்பெருந் தகையே மாக்கள்
மண்டியூர்ந் தொலிக்குங் கோதை மங்களாம் பிகையாள் வாழுங்
கண்டியூர் வீரட் டேசா கதியெனக் கருள்செய் வாயே.

## கோச்சகம்.

அங்கமெடுத் திற்றைவனா யானபயன் பூனையினிச்
செங்கமலன் பாலனுகாச் சித்திநிலே யெற்கருள்வாய்
தெங்கரம்பை மாவருக்கை சேர்கண்டி யூரிலுயர்
மங்களமா தங்கியிடம் வாழ்வீரட் டேச்சுரனே.

இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

ஓங்கு முக்கண்ணன் ஒண்கண்ணின் றிண்மணியும்
பூங்க டுக்கையங் கண்ணிபுனே புண்ணியனே. (ஓங்கு)

அனுபல்லவி.

வாங்கு வின்னுதற் றேங்கு யின்மொழி
மங்களமா தங்கியுமை பங்கில்வளர் சங்கரனே. (ஓங்கு

### சரணங்கள்.

ஆல போசனு அண்டர்களுந் தொண்டர்களுஞ்
சீல மாய்த்தினந் தெண்டனிட நின்றவனே
சாலம் போல்வரு ஞால மீதொரு
தையலர்மேல் மையலினால் மெய்யிளையா துய்யவருள். (ஓங்கு)

தூண்டி டற்கருஞ் சோதியனே நீதியனே
ஆண்ட ருள்நிரு பாதியனே ஆதியனே
நீண்ட மாலயன் காண்டி டாவியன்
நித்தியனே சத்தியனே சித்தமென்பால் வைத்தருள்வாய். (ஓங்கு)

காட்சி யாவுநின் றன்னுருவா யுன்னுறுவார்
சாட்சி யாமொரு தன்மயனே சின்மயனே
மீட்சி யின்றியுன் மாட்சி யொன்றியென்
வேகமொழிந் தேகவெளிப் போகமெனக் காகவருள். (ஓங்கு)

சோம சேகரா துய்யவிடை வையசிவா
சேம மேனியா செய்யமழுக் கையுடையா
ஓமென் றுள்ளொளி யாமென் றும்பெரி
யோருணாசெய் நற்கண்டி யூருறைவீ ரட்டேசா. (ஓங்கு)

### நாமாவளி.

எங்கணுமேவிய எண்குண வாளா-மங்களநாயகி தன்மணவாளா. (௧)
ஓமொட் டாமுரு வுற்றவ தீதா-வீரட் டேஸ்வர மெய்ச்சிவ போதா. (
மான்முத லோர்பணி சங்கரா-நான்முக னொரொரு கங்கரா. (௩)
அண்டர் மேவருஞ் சயதேசா-கண்டியூமொனுர் தலவாசா. (௪)
அதிகுண வதிசய வமலம கேசா-மதிகதி ரனல்விழி வரதவி லாசா. (
ஓதக் கடல்விட முண்டத யாளா
வேதப் பொருளடி கொண்டகு ணாளா. (௬)
விதுநதி யணியுங் கோடீரா-இதுததி யெனைவந் தாடீரா. (௭)
அத்தன் பரமன் அதிசய னமலன்-நித்தன் சகலன் நிறைபத கமலன்
மனவாக் கறியா வளமலி வரதா-நினைவார்க் கெளியா நிறைதருசரதா
சிவசங் கரபுங் கவசுக புரணு-நவவெண் குணபங் கயவிரு சரணு. (௮)

சிவமயம்

# திருப்பூந்துருத்தி.

புட்பவனநாதர்—அழகாலமர்ந்தநாயகி.

## விருத்தம்.

குணவா ரிதியே பெருங்கருணைக் குன்றே முக்கட் கொழுஞ்சுடரே
பணவா ளரவப் பணியணியெம் பரனே யுலகிற் பகருவமை
அணவாப் புகழ்ப்பூந் துருத்தியுறை யழகா லமர்ந்த நாயகியார்
கணவா புட்ப வனநாதா கடையேன் றன்னைக் காப்பாயே.

## சங்கராபரணம்.

ஓதுமை வழிநெஞ் செய்தா துனைநினைந் தெந்நா ளென்பாற்
போதுமை மூன்று நீப்பேன் பொலன்கொள்பூந் துருத்தி வாழ்வண்
டேதுமை யைம்பான் முக்க ணேழங்கழ கால மர்ந்த
மாதுமை மகிழும் புட்ப மாவன நாதா போற்றி.

## கொச்சகம்.

பண்ணியலா லன்பொடுனைப் பாடிவணங் கித்தினமும்
எண்ணியவா றின்பமுநா னென்றடைவே னெண்குணமும்
நண்ணியழ காலமர்ந்த நாயகியா ரோடுறையும்
புண்ணியனே பூந்துருத்திப் புட்பவன நாயகனே.

இராகம்-புன்னாகவராளி சிந்து-அடி-சாப்பு-தாளம்.

புட்பமா வன நாதனே
பெட்புறுந் தொண்டர்க ளுட்பதி யிற்பதி நாளும்
ஐயனே விடை வையனே
துய்யவெண் ணீறணி மெய்யனே செய்யனே மிகுந்

# சப்தஸ்தானத்தோத்திரம்.

நித்தனே பரி சுத்தனே கொன்றை
மத்த நதிமதி வைத்த சடிலமும்

அண்டர்மா முனி வோர்புகழ் திரி
புண்டர மேவிய முண்டகக் காட்சியும்

பொன்னிருங் குழைக் கன்னமும் அன்பர்க்
கின்னருள் செய்யெழின் மன்னுமுக் கண்களுஞ்

சந்ததந் திக ழைந்தெனும் அருள்
விந்தைத் தொழில்புரி யைந்து முகங்களுங்

கஞ்சனு ரண னஞ்சுறுங் கொடு
நஞ்ச மருந்திய அஞ்சனக் கண்டமுங்

கண்டுதே னெனத் தொண்டர்சொல் நெடுந்
தண்டமிழ் மாலிகை கொண்டவெண் டோள்களுஞ்

சீலமா மக்க மாமணி தலை
மாலைவெண் முப்புரி நூலணி மார்பமும்

புங்கவா ரணப் போர்வையும் வளர்
துங்க மழுமறி தங்கிய கைகளுங்

கோலமாம் புலித் தோலணிந் தொளி
காலு மிடையுநல் மால்விடை யும்புகழ்

ஆட்சிசேர் சக சாட்சியாங் கண்டை
மாட்சித் திருவடிக் காட்சியை யுங்கண்டு

மைந்தனே னுய்வ தெந்தநாள் மறை
யந்தர னேசய சுந்தர னேதினம்

அருந்தவர்க் கருள் சுரந்திடுந் தயை
பொருந்து மழகா லமர்ந்த வுமையுடன்

இப்பெரும் புவி வைப்புளார் சொலும்
ஒப்பரும் பூந்துருத் திப்பதி மேவிய. (புட்பமா வன நாதனே)

## நாமாவளி.

கருப்போர் துறப்புறு தெனக்கருளே
திருப்பூந் துருத்திவாழ் சிவப்பொருளே. (க)

அறியா வறிவே யாரமுதே-பிறியா தருள்வை நேரமிதே. (உ)

பெண்ணு ணலியாய்ப் பிறியா நிதியே
அண்ணு வரசே யருள்வா ரிதியே. (ங)

பூந்துருத்திப் போதனே புட்பவன நாதனே
தேந்தண்மலர்ப் பாதனே திவ்யகுணு நீதனே. (ச)

நித்திய முத்தம கத்துவ சத்துவ நிலையா நிர்க்குணனே
சத்தியை யத்தம்வை தத்துவ சத்திய தலைவா முக்கணனே. (ரு)

வேதார்த்தா மாமூர்த்தா-விரதா வரதா சுரர்தாதா. (சா)

அரவப் பணியைப் புனைதற் பரனே
கரவற் றவருட் பதியக் கரனே. (எ)

அனந்த லோசனன் அத்துவன் மோனன்
தினந்த போதனர் சித்தம்வை ஞானன். (அ)

மான்மழுமேவிய பாணியனே-வான்மதிசூடிய வேணியனே. (கூ)

அம்பலவாணனை நாடுதலே-நம்பலமானது கூடுதலே. (௰)

சிவமயம்

# திருநெய்த்தானம்.

நெய்யாடியப்பர்—வாலாம்பிகை.

## விருத்தம்.

நீர்மேவு நெடுநேமித் துகில்பூண் டோங்கு
நிலமகள்பொன் மலர்வதன நிகர்த்து மேவுங்
கார்மேவு பூஞ்சோலைத் தேனுந் தேமாங்
கனித்தேனுங் கதலிபலாக் கனியின் றேனுஞ்
சீர்மேவு பொன்னிநதிப் புனலும் பாய்ந்து
செந்நெலொடு கன்னல்வளஞ் செழிக்குஞ் செய்யார்
பேர்மேவு நெய்த்தானப் பதியில் வாலாம்
பிகைமேவு நெய்யாடி யப்பா போற்றி.

## சங்கராபரணம்.

ஓதியா ரணங்க ளன்கு மொப்பிடற் கொண்ணு ஞானச்
சோதியா யிலங்கு நின்றாட் டொண்டருக் கென்று ளாவேன்
பேதியா தொருபால் வாலாம் பிகையுறத் திருநெய்த் தானத்
தாதியா யுறைநெய் யாடி யப்பனே யமல வாழ்வே.

## கோச்சகம்.

எத்தானத் தெவ்வுயிரு மீன்றும் பருவமுறு
மைத்தானக் கண்ணியுமை வாலாம் பிகையோர்பால்
நெய்த்தானத் திற்பரவும் நெய்யாடி யப்பாநின்
மெய்த்தானத் தாண்மறவா மெய்யுணர்வு தந்தருளே.

## இங்கிலீஷ் நோட்.

அம்பிகைமண வாளனேயரு ளாளனேதசத் தோளனே
நம்புமன்பருக் கின்புகந்திடுஞ் செம்புதுமலர்த் தாளனே
நாடுநாகமு நீடுமாலயன் றேடுஞ்சீருடை யாளனே
நக்கனே மிக்கநின் நற்கழலிணை யெற்கருள். (அம்பிகை)

முப்புரமெரித்த வற்புடையா பொற்புயர்கங்கை மதிச்சடையா
செப்புறு மான்மழு வக்கரனே வுயர்
அற்புத நிர்க்குண தற்பரனே
தினமுநின் றனதுதோத் திரமுரைத்திட வரமருள். (அம்பிகை)

சற்குணருளத்தி னிற்பவனே நிர்க்குணவிகசி தத்தவனே
சொற்களெவைக்கு முதற்பொருளே பர
சிற்ககனத்தின் முடிப்பொருளே
தொண்டனே னுன்றன்ரு ளண்டிநிற்ப தெந்நாள். (அம்பிகை)

மூவர்புகழ்ந்திடும் வித்தகனே கேவலபூரண வுத்தமனே
சேவின்மிசைவரும் பார்த்திபனே சர்வ
சீவதயாபர மூர்த்தியனே
செருக்கினை யொருக்கியென் சித்தமகிழ வைத்தருள். (அம்பிகை)

சுத்தமெய்ஞ்ஞான சுகோததியே சத்திவாலாம்பிகை தன்பதியே
சித்தா வென்மொழி யைக்கோடி திரு
நெய்த்தா னத்துறை நெய்யாடி
செல்வமுங் கல்வியுஞ் சிறந்திடவுள்ள மகிழ்ந்தருள். (அம்பிகை)

## நாமாவளி.

முத்தா முப்பொரு ளானவனே-நெய்த்தா னத்துறை வானவனே. (க)
நாலாம் பொருளெனு மாதியனே-வாலாம் பிகையொரு பாதியனே. (உ)
அப்பா ருஞ்சடை நெய்யாடி-யப்பா வென்றுரை யைக்கோடி. (ங)
சம்போ சங்கர சதோதயா-நம்பா விங்கித நிராமயா. (ச)
தேவதேவசின் மயகுருநாதா-மூவரோதுசெந் தொடையணிபாதா. (ரு)
அரியாரணனுக் கரியானே-பரிவாரியருக் குரியானே. (சு)
எல்லாமேவிய வல்லவனே-எல்லாமாகியு மல்லவனே. (எ)
சருவ சராசர சாட்சியனே-அருவுருவாகிய காட்சியனே. (அ)
ஆவிடை மேவிய மாசிலா-மால்விடை யூர்தரு கோபாலா. (கூ)
மாதவர் சிந்தா மணியருண் மலையே
ஆதர வுன்ரு ளலதய விலையே. (ய)

சம்போ சிவ கங்காதர
சம்போ சிவ அரஹர.

## பொது.

இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

சம்போசிவ சம்போசிவ சம்போசிவ சம்போசிவ
சம்போசிவ சம்போசிவ சகசீவா திபதே.

அருளானந்த சுயதேசா-அடியாருளந் தனில்வாசா. சம்போசிவ.
பழமாமறைபுகழ்தீரா-பாகீரதி கோடீரா. சம்போசிவ.
திரிபுண்டர தரபாலா-செவியார்குழை புனைகோலா. சம்போசிவ.
திரியம்பக சகநேயா-திகழைம்முக மொளிர்தூயா. சம்போசிவ.
அயன்மாலம ருமண்டா-ஆலம்புனை மணிகண்டா. சம்போசிவ.
சிரமாலிகை யணிதோளா-திவ்யாம்பிகை மணவாளா. சம்போசிவ.
மழுமான்பதிமலர்க்கையா-வளர்மானொடு விடைவையா. சம்போ.
கரிவேங்கையினுரியாளா-கண்டாமணி யொளிர்தாளா. சம்போசிவ.

இராகம்-இந்துஸ்தான் காப்பி-ஆதிதாளம்.

பல்லவி.

தத்வாதீதத்தைத்தேடு சர்வ தத்வமுழுமயற்கோடு மனமே(தத்வாதீத)

அநுபல்லவி.

சுத்தமெய்ஞ்ஞான நூற்களைப்பாடு
துஷ்டர்களிஷ்டர் தனைவிட்டுப்போடு. (தத்வாதீத.)

சரணங்கள்.

மலமெய்ம்மூகிடுநவத் துவாரமாங் கூட்டை
மானித்தலைந்தால் வரும்பவ மூட்டை
சலனமில்லாப்பரி பூரண வீட்டைச்
சார்ந்தமெய்ஞ்ஞானிகள் சரித்திடும் பாட்டை. (தத்வாதீத.)

பொன்னும் பொருளிடத்தி லாசையாஞ் சட்டை
போர்த்துநீ யலைவதெல் லாமப்ர திஷ்டை
ஒன்றிரண் டாய்வரு முன்னிலைச் சுட்டை
ஒழித்துநிற்பதல்ல வோசுக நிஷ்டை. (தத்வாதீத.)

பற்பலவாகிய பாவனை விண்டு
பார்ப்பவர்தமக்கல்லோபரகதி யுண்டு
முற்படுநான்மறை முடிவினைக் கண்டு
முத்தன்சிவானந்தன் மொழியையுட் கொண்டு. (தத்வாதீத.)

## மங்களம்.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆநந்த மங்களமே ஜெயஜெய ஆநந்த மங்களமே.

அநுபல்லவி.

வானந்த மாயினு மண்ணந்த மாயினுந்
தானந்த மில்லாமெய்த் தானேதா னானவர்க். (ஆநந்த)

சரணங்கள்.

ஒன்றினும் பற்றிலதா யுயிர்தொறு நின்றிடு நித்தியமாய்
நன்றிட ரற்றதுவாய்ப் புலன்வழி வென்றவர் முற்றுணர்வாய்
என்று மிருந்த படியே யிருந்திடும்
ஏகவடிவான எம்பரி பூரணர்க். (ஆநந்த)

கற்பனை யற்றதுவா யடியர்நெஞ் சிற்பதி யுற்றதுவாய்
தற்பத சித்துருவாய் மறைமுடி யிற்புக லற்புதமாய்
எற்பக லின்றி யிணையொன்று மின்றியே
எல்லாமு மாயல்லா தாகிய வல்லவர்க். (ஆநந்த)

காற்றை யடக்காமல் நெடுவனா கானத் தலையாமல்
வேற்றுரு வாகாமல் பலபல வேடங்கள் பூணாமல்
நாற்றமும் பேறவெந் நாளுந் துதிப்போர்க்கு
ஞானந் தருஞ்சற் சிவாநந்த நாதர்க்கு. (ஆநந்த)

மங்களமே ஜெய ஜெய
ஆநந்த மங்களமே.

சப்தஸ்தானத்தோத்திரம்

முற்றிற்று.